

அமர்ஜோதி
மூவீஸ்
கற்பகம்
Aykan

# கற்பகம்

## —நடிகர்கள்—

| | | |
|---|---|---|
| ஜெமினி கணேசன் | — | எஸ். வி. ரங்காராவ் |
| எம். ஆர். ராதா | — | ஆர். முத்துராமன் |
| வி. கே. ராமசாமி | — | வி. நாகையா |
| கரிக்கோல் ராஜு | ... | சேதுபதி |

கௌரவ நடிகர் எஸ். வி. ஸஹஸ்ரநாமம்

## நடிகைகள்

| | | |
|---|---|---|
| சாவித்திரி | ... | சீலாதேவி |
| கே. ஆர். விஜயா (புதுமுகம்) | ... | மனோரமா |
| எம். எஸ். எஸ். பாக்கியம் | ... | குழந்தை ஷகீலா |

பாடல்கள்: வாலி

பின்னணி பாடியவர்: பி. சுசிலா

இசையமைப்பு: விஸ்வநாதன்—ராமமூர்த்தி

நடனம்: சின்னி—சம்பத்

ஒலிப்பதிவு டைரக்டர் எம். கண்ணன்

ஒலிப்பதிவு பாடல்: டி. எஸ். ரங்கசாமி

ஒலிப்பதிவு-வசனம்: டி. எஸ். ராஜு

உதவி: என். ராமமூர்த்தி, எம். கண்ணன்

ரீ-ரிகார்டிங்: ஜே. ஜே. மாணிக்கம்

எடிடிங்: ஆர் தேவராசன்

மேக்கப்: சிவராமன்—பீதாம்பரம்—கஜபதி

உடை அலங்காரம் சங்கரன், விவேகானந்தன்

ஸ்டண்ட்: சாண்டோ கிருஷ்ணன்-பார்டி

வெளிப்புறக் காட்சிகள்: மோட்டாச்சி கார்டன்

புரொடக்ஷன் நிர்வாகம்: கே. என். சுந்தரம்

உதவி டைரக்ஷன் எம். வி. ராமநாத்

ஜெனரல் மானேஜர் ஆர். பாலசுப்ரமணியம்

தயாரிப்பு: கே. எஸ். சபரிநாதன்

கதை, வசனம், டைரக்ஷன்: கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

ஸ்டுடியோ: பரணி

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1.

# கதைச்சுருக்கம்

பிள்ளையார்பட்டி என்ற கிராமத்தில் நல்லசிவம் ஒரு பண்ணையார், அவருக்கு ராஜாங்கம் என்ற மகனும், கற்பகம் என்ற மகளும் உண்டு.

அவ்வூரிலேயே உழைப்பாளியும், நல்ல உள்ளமும் கொண்ட சுந்தரத்தைத் தன் மகளுக்குக் கட்டிவைக்கிறார் பண்ணையார். ஆனால் மகனைப் பொறுத்த வரையில் பண்ணையார் அவன் விருப்பப்படியே தாண்டவத்தின் மகள் பங்கஜத்தை மணமுடிக்கிறார். ஆனால் தன் சொத்துக்குப் பாதுகாப்பாக சுந்தரத்தை நியமித்து, அவன் கையில் சாவிக் கொத்தைக் கொடுக்கிறார். தாண்டவம் தடுமாறுகிறார்.

பங்கஜம் ஒரு பெண் குழந்தையைப் பெறுகிறாள். குழந்தை மீனாட்சி தன் அத்தை கற்பகத்திடமே வளருகிறாள். கற்பகத்தையும், சுந்தரத்தையுமே பெற்றோர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாள். அவர்களுடனேயே ஒட்டிக்கொண்டு விடுகிறாள். இது தாண்டவத்திற்கும் ராஜாங்கத்திற்கும் ஆத்திரத்தைக் கொடுக்கிறது. அவர்கள் வக்கீல் வீட்டிற்குச் சென்று பண்ணையாரின் சொத்தில் பாகம் கேட்டு நோட்டீஸ் அனுப்ப முயற்சிக்கின்றனர். இதனால் பண்ணையார் கோபமடைந்து, அதன் விளைவாக ராஜாங்கம், பங்கஜம் இருவரும் குழந்தை மீனாட்சியுடன் வெளியேறுகின்றனர்.

குழந்தை மீனாட்சி இல்லாமல் கற்பகம் தவிக்கிறாள். ஆனால் குழந்தை மீனாட்சி அவளைத் தேடிக்கொண்டு வயல் பக்கம் வருகிறது. சுந்தரம் அவளை வீட்டிற்கு அழைத்து ஆவலுடன் குழந்தைக்கு சாதமூட்ட, பங்கஜம் வேகமாக வந்து குழந்தையைப் பிடுங்கிச் செல்கிறாள். தெருவில் ராஜாங்கம் கட்டிவைத்த முரட்டுக் காளை ஒன்று கம்பை அறுத்துக்கொண்டு குழந்தையை நோக்கிப் பாய்ந்து வருகிறது. குழந்தையைக் காப்பாற்ற ஓடிவந்த கற்பகம் அந்தக் காளை மாட்டிற்குப் பலியாகிறாள். ஊரே கண்ணீர் வடிக்கிறது

சுந்தரம் மனம் வெறுத்துத் தன் வீட்டிற்குச் சென்றுவிட, பண்ணையார் சமாதானம் சொல்லி அழைத்து வருகிறார். கற்பகத்துக்குப்பின் அந்தக் குழந்தைக்குத் தகுந்த ஆதரவு வேண்டுமென நினைத்தப் பண்ணையார் தன் பால்ய நண்பனும் ஓய்வுபெற்ற கலெக்டருமான சுப்ரமணியத்தின் மகள் அமுதாவை சுந்தரத்துக்கு இரண்டாம் தாரமாக முடிக்கிறார்.

குழந்தை மீனாட்சி அமுதாவிடம் நெருங்க மறுக்கிறாள். அவளைக் கண்டால் பயந்து ஓடுகிறாள். இதனால் சுந்தரத்திற்கும் அமுதாவிற்கும் மனத்தாங்கல் வருகிறது.

இந்நிலையில் தாண்டவம் சில்லரைத் தொந்தரவு கொடுத்து வருகிறான். சொத்துக்காகவே தாண்டவம் இவ்வளவும் செய்கிறான் என்பதை அறிந்த அமுதா தன் தகப்பனிடம் அவருடைய சொத்து முழுவதையும் தாண்டவத்தின் பெயருக்கு மாற்றிக் கொடுக்கச் சொல்கிறாள். இல்லையென்றால் தான் மாங்கல்யத்துடன் வாழமுடியாது என்று கதறுகிறாள். கலெக்டரும் தன் சொத்தை தாண்டவத்தின் பெயருக்கு மாற்றிக் கொடுக்கிறார்.

தாண்டவம் சொத்தைப் பெற்றுக்கொண்டு திருப்தி அடையாமல் நோட்டீஸ் விடச்சொல்கிறான். நோட்டீசைக் கண்ட பண்ணையார் ஆத்திரமடைகிறார்.

மற்றவை திரையில்.

# கற்பகம் பாடல்கள்

## பாட்டு 1

பாடியவர்: பி. சுசிலா

ஆயிரம் இரவுகள் வருவதுண்டு
ஆனல் இதுதான் முதல் இரவு
ஆயிரம் இரவுகள் வருவதுண்டு
ஆயிரம் உறவுகள் வருவதுண்டு
ஆனல் இதுதான் முதல் உறவு
ஆயிரம் உறவுகள் வருவதுண்டு.
வயதில் வருவது ஏக்கம்—அது
வந்தால் வராது.........—...—....
வந்ததம்மா மலர்க் கட்டில்
வீட்டினில் ஆடிடும்—......
ஆஹா ஆஹா ஆஹா
ஆரோரோ ராரோ.
வருவார் வருவார் பக்கம்—உனக்கு
வருமே வருமே...——
தருவார் தருவார் நித்தம்—இதழ்
தித்திக்கத் தித்திக்க.........
ஆஹா ஆஹா ஆஹா
ஆராரரோ ராரோ.
யாரோ சொன்னர் கேட்டேன்—நான்
கேட்டதை உன்னிடம் சொன்னேன்
நானுஞ் சொன்னது பாதி—இனி
தானுய்த் தெரியும் மீதி
ஆஹா ஆஹா ஆஹா
ஆராரரோ ராரோ.

## பாட்டு 2

பாடியவர்: பி. சுசிலா

உருஆஆ ஆயி ஆரி ஆரி ஆரி ஆரி ஆராரோ
அத்தைமடி மெத்தையடி
ஆடி விளையாடம்மா

ஆடும் வரை ஆடிவிட்டு
அல்லி விழி மூடம்மா
அத்தைமடி மெத்தையடி.
மூன்றும் பிறையில் தொட்டில் கட்டி
முல்லை மல்லிகை மெத்தையிட்டு
தென் குயில் கூட்டம் பண் பாடும்
மான்குட்டி கேட்டுக் கண் மூடும்.
வேறோர் தெய்வத்தைப் போற்றவில்லை
வேறோர் தீபத்தை ஏற்றவில்லை
அன்றோர் கோயிலை ஆசகி வைத்தேன்
அம்பிகையாய் உனைத் ஆக்கி வைத்தேன்.
அன்னை மடி மெத்தையடி
ஆடி விளையாடம்மா
ஆடும் வரை ஆடிவிட்டு
அல்லி விழி மூடம்மா.
அன்னை மடி மெத்தையடி
உருஆஆ ஆயி ஆரி ஆரி ரி ஆரி ஆராரோ
வந்தால் உன்னுடன் வந்திடுவேன்
நின்றால் உன்னுடன் நின்றிடுவேன்
தந்தால் என்னுயிர் தந்திடுவேன்
தித்திக்கும் முத்தங்கள் சிந்திடுவேன்
அன்னை மடி மெத்தையடி
ஆடி விளையாடம்மா
ஆடும்வரை ஆடிவிட்டு
அல்லி விழி மூடம்மா
அன்னை மடி மெத்தையடி
உருஆஆ ஆயி ஆரி ஆரி ஆரி ஆரி ஆராரோ

பாட்டு 3

பாடியவர். பி. சுசிலா

பக்கத்து வீட்டுப் பருவ மச்சான்
பார்வையிலே படம் புடிச்சான்
பார்வையிலே படம் புடிச்சி
பாவை நெஞ்சில் இடம் புடிச்சான
மனசுக்குள்ளே தேரோட்ட—
மைவிழியில் வடம் புடிச்சான
மருக்கொழுந்து வாசத்திலே—
மாந்தோப்பில் வழி மறிச்சான்
மாந்தோப்பில் வழி மறிச்சி—
மயக்கத்தையே வரவழைச்சான்
தைமாதம் தாலி கட்ட—
மார்கழியில் கையெ புடிச்சான்
வைகையிலே வெள்ளமில்லே—
விடியும்வரை கதை படிச்சான
விடியும்வரை கதை படிச்சி—
முடியாமல் முடிச்சி வெச்சான்
ஊரெல்லாம் உறங்கி விடும்—
உள்ளம் மட்டும் உறங்காது
ஓசையெல்லாம் அடங்கிவிடும—
ஆசைமட்டும் அடங்காது
ஆசைமட்டும் அடங்காமல—
அவனே மட்டும் நெனச்சிருப்பேன.

பாட்டு 4

பாடியவர்: பி சுசிலா

மன்னவனே அழலாமா?
கண்ணீரை விடலாமா?
உன்னுயிராய் நானிருக்க
என்னுயிராய் நீயிருக்க
மன்னவா மன்னவா மன்னவா

கண்ணை விட்டுப் போனாலும்
கருத்தை விட்டுப் போகவில்லை
மண்ணை விட்டுப் போனாலும்
உன்னை விட்டுப் போகவில்லை.
இன்னொருத்தி உடலெடுத்து
இருப்பவளும் நானல்லவா?
கண்ணெடுத்துப் பாராமல்
கலங்குவதும் வீணல்லா?
மன்னவா மன்னவா மன்னவா (மன்

உன் மயக்கம் தீர்க்க வந்த
பெண் மயிலைப புரியாதா?
தன் மயக்கம் தீராமல்
தவிக்கின்றாள் தெரியாதா
என்னுடலில் ஆசையென்றால்
என்னை நீ மறந்துவிடு
என்னுயிரை மதித்திருந்தால்
வந்தவளை வாழவிடு.
மன்னவா மன்னவா மன்னவா. (மன்

வணக்கம்

புதிய **தம்பதிகளுக்கு** அன்பளிப்பதற்கேற்ற பயனுள்ள

# பரிசு நூல்கள்

## குடும்பப் பெண்

2

மண வாழ்வில் விளக்கேற்றி வைக்கும் நற்பண்புடைய பெண்ணி
னாலேயே இல்லற தீபம் சுடர்விட்டுப் பிரகாசிக்கும், அந்த ஒளிவிடும்
சுடரைத் தூண்டிப் பிரகாசிக்கச்செய்யும் அக் குடும்பப் பெண்ணின்
தன்மையையும். ஆணும் பெண்ணும் இல்வாழ்வில் நடந்து கொள்ள
வேண்டிய முறைமைகளையும் தெளிவாக சுவையான கதைமூலம் இந்
நூல் சித்தரிக்கிறது.

**ஆசிரியர் • எம். மோகன்**

## குடும்பக்கட்டுப்பாடு

3

"இல்வாழ்வில் குழந்தைக் கட்டுப்பாடு ஓர் அம்சமெனினும். தாம்
பத்திய உறவின் மற்றைய அம்சங்கள் முழுவதையும் தெளிவாகப்
புரிந்துகொண்டு, அதற்கேற்ப தங்களை அவ் வாழ்விற்குரியவர்களாகத்
தயார் செய்து கொள்வதன் மூலமே நிறைவான இல்லற இன்பத்தை
அடைய முடியும்" என்னும் கருத்தைத் தெளிவுபட விளக்கும் இந்
நூலில் தாம்பத்திய உடலுறவு பற்றிய கேள்விகட்கும் விடை காணலாம்

**ஆசிரியை • டி.எஸ். ஜனககுமாரி**

## குடும்பநலத்திட்டம்

2-50

குடும்பத்தில் குதூகலம் கூத்தாட வேண்டுமா? இல்லாமை விரட்
டப்பட வேண்டுமா? பொருளாதாரம் செழிக்க வேண்டுமா? வீடுவாசல்,
தோட்டம்துறவு, பொன் பொருள் அத்தனையும் வேண்டுமா? வேண்டும்!
ஆனால் எல்லாவற்றிற்கும் அரும் பெரும் திட்டங்கள் தேவை. அந்தத்
திட்டங்கள் என்னென்ன என்பதை "குடும்ப நலத் திட்டம்" விரிவாக
விளக்குகிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாத்து வைக்கப்பட
வேண்டிய அரிய பொக்கிஷம்.

**ஆசிரியை • ராஜம்-சேரன்**

## குடும்பக்கைத்தொழில்

3-50

சிறு மூலதனம் இருந்தாலே போதும்: சிறு தொழிலைச் செய்ய
லாம். இன்று சிறு தொழில் நாளை பெரு தொழிலாக உருப் பெறும்.
பத்து ரூபாய் வைப்பவரும் ஒரு முதலாளி. பத்தாயிரம் போடுபவரும்
ஒரு தொழிலதிபர் முதல் இல்லாதவரும் முன்னூறு ரூபாய் சம்பாதிக்
கலாம் எப்படி? "குடும்பக் கைத்தொழில்" கூறுகிறது அரும்பெரும்
ஆலோசனை. ஒவ்வொரு குடும்பத்திலும் வைத்துப் போற்றப்பட வேண்
டிய அரிய பொக்கிஷம் இது.

**ஆசிரியர் • சேரன்**

# ஸ்ரீமகள் கம்பெனி

122, வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை-1

போன் • 32858 த.பெ.எண் • 275 தந்தி • கலாமன்றம்

கிளைகள்: மதுரை - திருச்சி - கோயமுத்தூர் - பெங்களூர்